

திண்டுக்கல் மாநகர கழகத்தின் சார்பில் திராவிடப் பொங்கல், சமூக நீதிக்கான திருவிழா திண்டுக்கல் மாவட்ட கலைஞர் மாளிகை அலுவலகம் அருகில் நடைபெற்றது. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தலைமை வகித்து பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார். கிழக்கு மாவட்டக் கழக செயலாளர், பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் முன்னிலை வகித்தார். மாவட்ட அவைத் தலைவர் காமாட்சி, மாவட்ட துணை செயலாளர் பிலால் உசேன், மார்க்கரைட் மேரி,மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, மாநகர செயலாளர் துணை மேயர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, நடராஜன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் அக்பர், பகுதி கழகச் செயலாளர்கள் சந்தோஷ் முத்து, ராஜேந்திரகுமார், சந்திரசேகர், பஜுலுல் ஹக், சூசைராபர்ட், மாநகரக் கழக நிர்வாகிகள் அழகர்சாமி,மீடியா சரவணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன், மாவட்ட உறுப்பினர்கள் மாவட்ட சார்புஅணி நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர். பின்னர் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி வாழ்த்துக்கள் கூறினர்.



மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்க உள்ள உலகப்புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மற்றும் விழாக்கமிட்டியினர்,பொதுமக்கள், அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## கடலூர் மாநகராட்சி – வடலூர் நகராட்சியில்

# ரூ.12.80 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகள்!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் திறந்து வைத்தனர்!

கடலூர், ஜன. 14-

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் காட்டு மன்னார் கோயில் சட்ட மன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், நகராட்சி நிருவாகத் துறை இயக்குநர் பா.மதுசூதன் ரெட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் கடலூர் மாவட்டம், வடலூர் நகராட்சியில் ரூ.7.53 கோடி மதிப்பீட்டிலான வள்ளலார் பேருந்து நிலையத்தினை நேற்று முன்தினம் (12.01. 2026) பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

தொடர்ந்து, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் கடலூர் சட்ட மன்ற உறுப்பினர் கோ.ஐயப் பன், காட்டு மன்னார் கோயில் சட்ட மன்ற உறுப்பினர் ம.சிந்தனைச் செல்வன், நகராட்சி நிருவாகத் துறை இயக்குநர் பா.மதுசூதன் ரெட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, ஆகியோர் முன்னிலையில் கடலூர் மாநகராட்சி, முதுநகர் பகுதியில் ரூ.5.27 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட பக்தவத்சலம் மார்க்கெட்டினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

**இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவிக்கையில்,**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி வடலூர் பேரூராட்சியினை நகராட்சியாக தரம்உயர்த்த ப்பட்டு வளர்ச்சிக்கு தேவை யான அடிப்படை வசதி களும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிக் கான மேம்படுத்தப்பட்ட பேருந்துநிலையம்அமைக்கப்பட்டு இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக 1972ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும் போது ரூ.4.25 கோடி மக்களுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. கடந்த 5 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் காரணமாக கூடுதலாக 1.30 கோடி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 1.30 கோடி மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சென்னை பகுதி மக்களுக்கு 830லி எம்.எல்.டி ஒரு நாளைக்கு குடிநீர் வழங்கி வந்தது. தற்போது 1350லி எம்.எல்.டி வழங்கப்பட்டு வருகிறது. பயன்படுத்திய நீரை மறுசுத்திகரிப்பு செய்து தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர் பெருக்குவதற்கான பணிகளையும் நகராட்சி நிருவாகத்துறை செய்து வருகிறது.

நமது கடலூர் மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 9 இலட்சம் மக்களுக்கு 26 எம்.எல்.டி குடிநீரும், நகராட்சி மூலம் 4 இலட்சம் மக்களுக்கு 34 எம்.எல்.டி குடிநீரும், பேரூராட்சி மூலம் 3 இலட்சம் மக்களுக்கு 22 எம்.எல்.டி குடிநீரும் வழங்கப்பட்டது. தற்போது குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2 குடிநீர் திட்டப் பணிகள் ரூ.488 கோடி மதிப்பீட்டில் 27 எம்.எல்.டியும், 11 கூட்டுக்குடிநீர் திட்டம் ரூ.114 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணிகள் 9 எம்.எல்.டியும், சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலை நகர் பேரூராட்சி, குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை சேர்ந்த 10 ஊராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம் ரூ.256 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இத்திட்டங்கள் அனைத்தும் நிறைவேறும் போது கூடுதலாக 2 இலட்சம் மக்களுக்கு 13 எம்.எல்.டி குடிநீர் வழங்க முடியும். கடலூர் மாநகராட்சியில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டம் நடைபெற்று வருகிறது. இப்பணி முடியும் போது 20,000 மக்களுக்கு 3 எம்.எல்.டி கூடுதலாக குடிநீர் வழங்க முடியும். பேரூராட்சிகளில் 3 குடிநீர் திட்டம் ரூ.49 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

இப்பணி முடியும் போது 54,000 மக்களுக்கு 1 எம்.எல்.டி கூடுதலாக குடிநீர் வழங்க முடியும். மேற்கூரிய திட்டங்கள் தவிர்த்து உள்ளூர் நீர் ஆதாரங்களை தனி மின்விசை திட்டங்கள் மூலம் 73 எம்.எல்.டி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மார்ச் 2026 இல் இந்த திட்டங்கள் அனைத்தும் நிறைவேறும் போது கடலூர் மாவட்டத்திலுள்ள மொத்தம் 26 இலட்சம் மக்களுக்கு தேவையான 208 எம்.எல்.டி குடிநீர் தாராளமாக வழங்கப்படும்.

கடலூர் மாநகராட்சி மற்றும் சிதம்பரம் நகராட்சியில் ரூ.173 கோடி மதிப்பீட்டிலான பாதாள சாக்காடைத் திட்டம் மூலம் சுமார் 3 இலட்சம் மக்கள் கூடுதலாக பயன்பெறுவர். நகராட்சியின் மூலம் 83 குடிநீர் திட்டப் பணிகள் 3,331.73 கோடி மதிப்பீட்டிலும், 33 பாதாள சாக்காடை திட்டப் பணிகள் 7363.71 கோடி மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் 17,523 கி.மீ சாலைகள், 135 சந்தைகள், 22 முதல்வர் படைப்பகம், 94 நுலகம் மற்றும் அறிவுசார் மையம், 108 நவீன எரிவாயு தகனமேடைகள், 518 புதிய பூங்காக்கள், 399 நீர் நிலைகள் மேம்பாட்டு பணிகள் என 5 ஆண்டுகளில் நகராட்சி நிருவாகத் துறை சார்பில் ரூ.1,400 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் செய்யப்பட்டுள்ளது என நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.

**இந்நிகழ்ச்சியில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தெரிவிக்கையில்,**

முதலமைச்சர் அவர்களால் நகர்ப்புற வளர்ச்சிக்காகவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு திட்டப் பணிகளை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்.

அந்தவகையில் வடலூர் நகராட்சியில் சாலை மற்றும் குளம் புனரமைப்பு பணி, பள்ளிகளில் கூடுதல் கட்டட வசதிகள் ஏற்படுத்துதல், நகராட்சி அலுவலகம், பூங்கா அமைத்தல், ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்துதல், சமுதாய கழிப்பறை, வடிகால் வசதிகள் என ரூ.76.09 கோடி மதிப்பீட்டில் 130 பணிகள் நடைபெற்றுள்ளது.

கடலூர் - விருத்தாசலம் (NH532) நெடுஞ்சாலையில் மாநகராட்சிக்கு இணையாக வடலூர் நகராட்சிக்கு உட்பட்ட பிரதான சாலையில் ரூ.125.00 இலட்சம் மதிப்பீட்டில் 108 அலங்கார மின்கம்பத்துடன் கூடிய 216 ஒளி உமிழ் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. திரு அருட்பிரகாச வள்ள லார் அவர்களின் புகழினை சர்வதேச அளவில் அனைவருக்கும் கொண்டு செல்லும் வகையிலும், சத்ய தரும சாலைக்கு வருகின்ற ஏராளமான பொது மக்களின் ஆன்மிக வசதியினை கருத்தில்கொண்டும் சர்வதேச மையமாக தரம் உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது.

தற்போதைய மக்கள் தொகை பெருக்கத்தால் பயணிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதாலும், பொதுமக்களின் தேவைக்கேற்ப அனைத்து அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்திடும் பொருட்டு புதிய பேருந்து நிலையம் வடலூர் நகராட்சிக்குட்பட்ட சேராக்குப்பம் கிராமத்தில் 6530 சதுர மீட்டர் பரப்பளவில் உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் துறை சார்பில் 585.00 இலட்சம், 15வது நிதிக்குழு மான்யம் நிதி திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.110.00 இலட்சம் மற்றும் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் ரூ.48.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.753.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்தில் 50 கடைகள் மற்றும் முதல் தளத்தில் 60 கடைகள் மொத்தம் 110 கடைகள் கட்டும் பணிகள் முழுவதுமாக முடிக்கப் பட்டு திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இப்புதிய பேருந்து நிலையம் 21 பேருந்து நிறுத்தங்கள் வசதி, முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் ஆண், பெண் கழிப்பறை வசதி, தாய்மார்கள் பாலூட்டும் அறை வசதி, உணவகம் வசதி, பயணிகள் அமரும் இடம் வசதி, பொருட்கள் பாதுகாப்பு அறை வசதி, நேரகாப்பாளர் அறை வசதி, பேருந்து ஒடு தளம் வசதி, சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, உயர்மின் கோபுர விளக்கு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையத்தினை இப்பகுதி பொது மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

பக்தவத்சலம் மார்க்கெட் புனரமைக்க வேண்டும் என்பது கடலூர் முதுநகர் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்துவந்த நிலையில் தற்போது கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5.27 கோடி மதிப்பீட்டில் பக்தவத்சலம் மார்க்கெட் புனரமைக் கப்பட்டு வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இன்றைய தினம் திறந்து வைக்கப் பட்டுள்ளது. இதில் 48 திறந்த வெளி கடைகள் மற்றும் 40 கதவுகளுடன் கூடிய கடைகளும் என ஆக மொத்தம் 88 கடைகள், பொதுமக்களின் வசதிக்காக குடிநீர், வாகனநிறுத்தம் வசதி, கழிப்பறைகள் ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளுடனும் அமைக்கப் பட்டுள்ளது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், மாநகராட்சி துணைமேயர் பா.தாமரைச் செல்வன், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் லட்சுமி, வடலூர் நகர மன்றத் தலைவர் சு.சிவக்குமார், துணைத்தலைவர் சுப்பு ராயலு, மாநகராட்சி ஆணை யாளர் முஜிபூர் ரஹ்மான், நகராட்சி ஆணையாளர் மல்லிகா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், துறை சார்ந்த அலு வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழர் திருநாளாம் "திராவிடப் பொங்கல்நிகழ்ச்சியாக நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் 1,509 நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடையுடன் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மேயர் ரெ.மகேஷ் தனது சொந்த செலவில் ஏற்பாடு செய்திருந்த பொங்கல் பரிசு தொகுப்பினை நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் உட்பட 851 பெண் பணியாளர்களுக்கு சேலை, 658 ஆண் பணியாளர்களுக்கு வேட்டி மற்றும் சட்டையும், மொத்தமாக 1,509 பணியாளர்களுக்கு பொங்கல் பானை, அகப்பை மற்றும் இரண்டு கரும்பு வீதம் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்.

## ஓட்டன்சத்திரம் தொகுதியில்

# 1839 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள்!

### அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!



ஒட்டன்சத்திரம், ஜன.14-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்ட மன்ற தொகுதியில் கடந்த 2021 முதல் 2026 வரை சுமார் 52 ஊராட்சி, மற்றும் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 7323 இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது,

அதனையடுத்து நடைபெற்ற விழாவில் ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள 18 ஊராட்சிகளுக்கு 1839 இலவச வீட்டுமனை பட்டாக்களை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கள் துறை அமைச்சர்

அர. சக்கரபாணி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வழங்கி பேசுகையில், தமிழ்நாட்டிலேயே திண்டுக்கல் மாவட்டத்தில் தான் தற்போது வரை

1 லட்சத்து 2000 வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளது என்று பேசினார். விழாவில் கோட்டாட்சியர் கண்ணன், வட்டாட்சியர்

கள் சஞ்சய்காந்தி, பிரசன்னா, நகராட்சி ஆணையாளர் ஸ்வேதா, ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், பொன்ராஜ்,

எஸ். ஆர். கே. பாலு, பி.சி. தங்கம், சுப்பிரமணி, பொதுக்குழு உறுப்பினர் தங்கராஜ்,

நகர்மன்ற தலைவர் திருமலைச்சாமி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், மாவட்ட மகளிர் அணி தலைவர் மலர்விழி, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர்கள் செல்வராஜ், சிவராமகிருஷ்ணன், ரத்தினம் மா. செல்வராஜ், சாரதாசிவராஜ், நகர அவைத் தலைவர் சோமசுந்தரம், ஒன்றியதுணைச் செயலாளர்கள் முருகானந்தம், ராமசாமி சிவகுமார், ராமகிருஷ்ணன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி, கிராம நிர்வாக அலுவலர்கள் சிவராஜன், வரதராஜன், பாபு, கிராம உதவியாளர்கள் விஜயபாஸ்கரன், பைசல்முகமது உள்ளிட்ட நிர்வாகிகள், பயனாளிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை அமைச்சர் அர.சக்கரபாணி. வழங்கினார்

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் ஏற்பாட்டில் நாகர்கோவிலில் 1,509 நிரந்தர - ஒப்பந்த

# தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடை பொங்கல் பரிசு தொகுப்பு!

### தூய்மை பணியாளர் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார்!

நாகர்கோவில், ஜன.14-

தமிழர் திருநாளாம் "திராவிடப் பொங்கல்" நிகழ்ச்சியாக நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் 1,509 நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடையுடன் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியானது 12.01.2026, திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு நாகர்கோவில் மாநகராட்சி, கலைவாணர் மாளிகை வளாகத்தில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மேயர் ரெ.மகேஷ் தனது சொந்த செலவில் ஏற்பாடு செய்திருந்த பொங்கல் பரிசு தொகுப்பினை நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் உட்பட 851 பெண் பணியாளர்களுக்கு சேலை, 658 ஆண் பணியாளர்களுக்கு வேட்டி மற்றும் சட்டையும், மொத்தமாக 1,509 பணியாளர்களுக்கு பொங்கல் பானை, அகப்பை மற்றும் இரண்டு கரும்பு வீதம் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்.

விழாவில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, உதவி ஆணையர் பாலசுந்தரம், மாநகர நல அலுவலர் மருத்துவர் மனோஜ்குமார், செயற் பொறியாளர் ரகுராமன், மண்டலத் தலைவர்கள் இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், பா. முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி, விளாத்திகுளம் ஒன்றிய,பேரூர் தி.மு.க. சார்பில் திராவிட பொங்கலை முன்னிட்டு, ஆண்களுக்கான கபாடி போட்டி மற்றும் பெண்களுக்கான கபாடி போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி. மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன் இமானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.